| | | |
|---|---|---|
| **பத்தாம் வகுப்பு – தமிழ் – இரண்டாம் இடைப்பருவத் தேர்வு – நவம்பர் 2022 (திருவண்ணாமலை மாவட்டம்)** | | |
| **பகுதி – I** <br> **சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** | | |
| 1 | (ஈ) சிலப்பதிகாரம் | 1 |
| 2 | (இ) வயலையும் உழவையும் | 1 |
| 3 | (அ) அகவற்பா | 1 |
| 4 | (இ) கல், மரம், காடுமேடு www.tamizhchittu.blogspot.com | 1 |
| 5 | (ஆ) மலர் | 1 |
| 6 | கோடைவயல் | 1 |
| 7 | தி.சொ.வேணுகோபால் | 1 |
| **பகுதி – II பிரிவு – 1** <br> **எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்கவும்.** | | |
| 8 | அரசர்களின் வரலாற்றையும் புகழையும் காலம் கடந்து நிலைத்து இருப்பதற்கு. | 2 |
| 9 | தம்மைவிட வலிமை குறைந்தாரோடு போர் செய்யக்கூடாது. | 2 |
| 10 | வாகை பூ | 2 |
| 11 | அரசனின் ஆட்சிக்குத் துணைபுரிந்தது. <br> உறையூரிலிருந்த அவையம் தனிச்சிறப்பு பெற்றது. <br> மதுரையிலிருந்த அவையம் துலாக்கோல் போன்று நடுநிலைமிக்கது. | 2 |
| **பிரிவு – 2** <br> **எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்கவும்.** | | |
| 12 | பகை நாட்டின் ஆநிரைகளைக் கவர்தல். | 2 |
| 13 | (பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக) <br> நாளை நான் முதலாகதாக **வரப்போகிறேன்**. <br> வளவன் **முன்னுக்குப்பின்னாக** பேசுகிறான். | 2 |
| 14 | (பொருத்தமாக சரியாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக) | 2 |
| 15 | சணல் | 2 |
| **பகுதி – III** <br> **எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.** | | |
| 16 | உரை என்பது பேசும் மொழியின் ஓட்டம். இதனைச் செய்யுளாகிய வயலில் பாய்ச்சுவது உரைப்பாட்டு மடை. சிலப்பதிகாரம் இதில் அமைந்தது. | 3 |
| 17 | தூசும் துகிரும் ஆரமும் அகிலும் <br> மாசுஅறு முத்தும் மணியும் பொன்னும் <br> அருங்கல வெறுக்கையோடு அளந்துகடை அறியா <br> வளம்தலை மயங்கிய நனந்தலை மறுகும்; | 3 |
| 18 | ♦ அகவலோசை பெற்று வரும். <br> ♦ நான்கு சீர்களைப் பெற்று வரும். <br> ♦ ஈரசைச்சீர் மிகுதியாகவும் காய்ச்சீர் குறைவாகவும் பயின்று வரும். | 3 |

| | | |
|---|---|---|
| | ♦ ஆசிரியத்தளை மிகுதியாகவும் வெண்டளை, கலித்தளை விரவியும் வரும்.<br>♦ மூன்று அடி முதல் எழுதுபவர் மனநிலைக்கேற்ப அடிகள் அமையும்.<br>♦ ஈற்றசை ஏகாரத்தில் முடித்தல் சிறப்பு.<br>**(அல்லது)**<br>➢ வெண்பா – செப்பல் ஓசை (இருவர் உரையாடுவது போன்ற ஓசை)<br>➢ ஆசிரியப்பா – அகவல் ஓசை (சொற்பொழியாற்றுவது போன்ற ஓசை)<br>➢ கலிப்பா – துள்ளல் ஓசை (கன்று துள்ளிலாற்போல சீரில் துள்ளி வரும் ஓசை)<br>➢ வஞ்சிப்பா – தூங்கல் ஓசை (சீர் தோறும் துள்ளாது தூங்கி வரும் ஓசை) | |
| **பகுதி – IV**<br>**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக.** | | |
| 19 | (பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக)<br>திருவண்ணாமலை, அரசு மேல்நிலைப் பள்ளியில் 15.11.2022 செவ்வாய் அன்று தமிழ் மன்றம் தொடக்கவிழா பள்ளி வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது.<br>தமிழ்மன்ற மாணவத் தலைவர் விழாவிற்கு வந்தோரை வரவேற்றுப் பேசினார்.<br>பள்ளியின் தலைமையாசிரியர் அவர்கள் சிறப்புரை ஆற்றினார்.<br>பள்ளியின் தமிழாசிரியர் தமிழ் மன்ற செயல்பாடுகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். www.tamizhchittu.blogspot.com<br>விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட கவிஞர் இன்சுவை தமிழின் சிறப்புகள் குறித்து உரையாற்றினார்.<br>மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன.<br>இறுதியாக தமிழ் மன்ற மாணவச் செயலர் நன்றியுரை நவின்றார். | 4 |
| 20 | (பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக)<br>**விடுநர்**<br>ஊர்ப் பொதுமக்கள்,<br>10, பாரதியார் தெரு,<br>வேங்கிக்கால்,<br>திருவண்ணாமலை மாவட்டம் – 606 752.<br>**பெறுநர்**<br>மின்வாரிய அலுவலர்,<br>மின்வாரிய அலுவலகம்,<br>திருவண்ணாமலை.<br>**மதிப்பிற்குரிய ஐயா,**<br>**பொருள்**: தெரு மின்விளக்குகளைச் சரிசெய்ய வேண்டுதல் சார்பு.<br>வணக்கம். எங்கள் தெருவில் சுமார் நூறு குடும்பங்கள் உள்ளன. எங்கள் தெருவிலுள்ள மின்விளக்குகள் அனைத்தும் பழுதடைந்துள்ளன. எனவே, ஐயா அவர்கள் தயைகூர்ந்து எங்கள் தெருவில் பழுதடைந்துள்ள மின்விளக்குகளைச் சரிசெய்து தருமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.<br><br>**இடம்** : திருவண்ணாமலை, இப்படிக்கு, | 4 |


Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

| | | |
|---|---|---|
| | **நாள்** :15.11.2022. ஊர்ப் பொதுமக்கள்.<br>**உறைமேல் முகவரி**<br>**பெறுநர்,**<br>மின்வாரிய அலுவலர்,<br>மின்வாரிய அலுவலகம்,<br>திருவண்ணாமலை. | |
| 21 | (பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக)<br>அணிவோம்! அணிவோம்! தலைக்கவசம் அணிவோம்!<br>மதிப்போம்! மதிப்போம்! சாலை விதிகளை மதிப்போம்!<br>அதிவேகம் ஆபத்தில் முடியும்.<br>செல்போன் தவிர்ப்பீர்! கூப்பிடுவது எமனாக கூட இருக்கலாம்!<br>வளைவில் முந்தாதே! www.tamizhchittu.blogspot.com | 4 |
| 22 | (பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக)<br>நான் சமீபத்தில் அமரர் கல்கி எழுதிய 'பொன்னியின் செல்வன்' என்னும் நாவலைப் படித்தேன்.<br>1951 களில் வார இதழ்களில் தொடராக வெளிவந்த இந்நாவலை புத்தகமாகப் படிக்கும்போது சிறப்பாக உள்ளது. சோழ மன்னர்களைப் பற்றி இந்நாவல் கூறுகிறது. மேலும் இந்நாவல் மூலம் சோழர்கால நாகரிகங்கள், ஆட்சிமுறை, பழக்கவழக்கங்கள் முதலியவற்றை அறிந்துகொள்ள முடிகிறது.<br>மிகச் சிறப்பான வருணனைகளுடன் கதை பரபரப்பாகவும் எதிர்பாராத திருப்பங்களுடன் நகர்வதால் தொடர்ந்து படிப்பதற்கு ஆர்வத்தை ஏற்படுத்துகிறது.<br>பண்டைய சோழர்காலத்திற்கே சென்ற அனுபவத்தை கல்கி நமக்குத் தந்துள்ளார். | 4 |
| **எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்கவும்.** | | |
| 23 | (பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக)<br>கொடு எனக் கேட்டவனுக்கு<br>கொடுப்பேன் எனக் கொடுத்தபோது<br>தடுப்பேன் எனத் தடை போட்டால்<br>தருமம் எப்படி தழைத்தோங்கும்! | 7 |
| 24 | பெருங்குளத்து காதலால் நடந்த பெருவழி<br>காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்து கண்ணகியும் கோவலனும் உறையூர் மற்றும் திருவரங்கம் வழியாக கொடும்பாளூர் என்னும் இடத்தை அடைந்தனர். தென்னவன் சிறுமலையில் வலப்பக்கம் வழியாகச் சென்றாள் மதுரையை அடையலாம். சிறுமலையின் இடப்பக்க வழியாகச் சென்றால் திருமால்குன்றம் (அழகர் மலை) வழியாக மதுரை செல்லலாம். இவ்விரண்டுக்கும் இடைப்பட்ட வழியில் சோலைகள் மிகுந்த ஊர்களும் காடுகளும் உள்ளன. அவ்வழியாக சென்றால் மூன்று வழிகளும் சந்திக்கும் மதுரை பெருவழியை அடைந்து மதுரை செல்லலாம். கோவலனையும் கண்ணகியையும் கவுந்தியடிகள் இடைப்பட்ட வழியிலேயே அழைத்துச் சென்றார். மதுரையில் கணவனை இழந்த கண்ணகி மதுரையிலிருந்து வைகையின் தென்கரை | 7 |


Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

| | | |
|---|---|---|
| | வழியாக நெடுவேல்குன்றம் (சுருளிமலை) சென்று வேங்கைக் கானல் என்னும் இடத்தை அடைந்தாள். | |
| 25 | (பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக)<br>**எம்.எஸ்.சுப்புலட்சுமி**<br>மதுரை சண்முகவடிவு சுப்புலட்சுமி. ஐந்தாம் வகுப்பு வரை மட்டும் படித்திருந்தாலும் பதினேழு வயதில் சென்னை மியூசிக் அகாதெமியில் கச்சேரி நடத்தி அனைவரது பாராட்டையும் பெற்றவர். இவர் பாடிய 'காற்றினிலே வரும் கீதம்' என்னும் பாடல் மிகவும் புகழ் பெற்றது. 'இசைப் பேரரசி' என்று நேருவால் அழைக்கப்பட்டவர். காந்தியடிகள் முன் 'இரகுபதி இராகவ இராஜராம்' என்னும் பாடலைப் பாடி பாராட்டுப்பெற்றவர். இவர் ஐ.நா சபையில் பாடியது குறிப்பிடத்தக்கது. தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், சமஸ்கிருதம், இந்தி, மராத்தி, குஜராத்தி ஆகிய மொழிகளில் பாடியுள்ளார். இவர் பல உயரிய விருதுகளைப் பெற்றுள்ளார். இந்தியா, மிக உயரிய விருதான 'இந்திய மாமணி' விருதளித்து சிறப்பித்துள்ளது. www.tamizhchittu.blogspot.com<br>**பாலசரஸ்வதி**<br>கி.பி 20 –ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆடுவது கீழ்மையானதாக கருதப்பட்டது. இவர் அந்த நிலையை மாற்றியவர். இவருடைய அரங்கேற்றம் தனது ஏழு வயதில் காஞ்சிபுரத்தில் தொடங்கியது. பதினைந்து வயதில் சென்னையிலுள்ள சங்கீத சமாஜம் அரங்கில் இவரின் ஆடல் நிகழ்ச்சி நடைபெற்றது. பண்டிட் இரவிசங்கர் அவர்கள் பெரிதும் பாராட்டினார். நாட்டுப்பண்ணான 'ஜனகணமன' பாட்டிற்கு மெய்ப்பாடுகளோடு நடனமாடினார். கல்கத்தா மற்றும் காசியில் நடந்த அனைத்திந்திய இசை மாநாட்டில் பங்கேற்று பாராட்டுப் பெற்றவர். ஐரோப்பா, அமெரிக்கா முதலிய நாடுகளில் நடன நிகழ்ச்சிகளில் பங்கேற்று பரதநாட்டியக் கலையை உலகறியச் செய்தவர். இந்திய அரசின் தாமரைச் செவ்வணி விருது பெற்றவர்.<br>**இராஜம் கிருஷ்ணன்**<br>எளிய குடும்பத்தில் பிறந்து இலக்கியவாதியாக உயர்ந்தவர். தமிழில் எழுதிய பெண்களில் முதன்முதலில் களத்திற்குச் சென்று செய்திகளைத் திரட்டி கதைகள் எழுதியவர். வேருக்கு நீர் என்னும் புதினத்திற்காக சாகித்திய அகாதெமி விருது பெற்ற முதல் பெண் எழுத்தாளர். 'பாஞ்சாலி சபதம் பாடிய பாரதி' என்னும் பாரதியின் வரலாற்றுப் புதினம் அனைவராலும் பாராட்டப்பெற்ற ஒன்றாகும். கரிப்பு மணிகள், குறிஞ்சித்தேன், சேற்றில் மனிதர்கள் முதலிய நூல்கள் மிகவும் புகழ்பெற்றவை ஆகும். எழுத்துகளில் நேர்மையான சினம், அறச்சீற்றம் இருக்கவேண்டும் என்பது இவரது வேண்டுகோளாகும்.<br>**கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன்**<br>நாட்டின் விடுதலைக்கு முன்பு கல்வி மறுக்கப்பட்ட காலத்தில் போராடிக் கல்வியைக் கற்ற மதுரையைச் சேர்ந்த முதல் பட்டதாரிப் பெண். காந்தியச் சிந்தனையில் கவரப்பட்டவர். ஒத்துழையாமை இயக்கம், சட்ட மறுப்பு இயக்கம், வெள்ளையனே வெளியேறு இயக்கம் ஆகியவற்றில் பங்குபெற்றார். உழுபவருக்கே நில உரிமை இயக்கம் தொடங்கி வேளாண்மை இல்லாத காலத்திலும் உழவருக்கு வருமானம் கிடைக்க ஏற்பாடு செய்தார். இந்திய அரசின் தாமரைத்திரு விருதைப் பெற்றவர். | 7 |


Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

| | | |
|---|---|---|
| | **சின்னப்பிள்ளை** www.tamizhchittu.blogspot.com<br>பள்ளிச் சென்று பாடம் படிக்காவிட்டாலும் பட்டறிவால் அனைத்தையும் கற்றுக்கொண்டவர். இவர் விவசாய நிலங்களைக் குத்தகைக்கு எடுத்து நடவு, களை எடுத்தல், அறுவடை என பெண்கள் குழு அமைத்து உழைத்தவர். வயதானவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு குழு மூலம் உதவி செய்தார். பத்துப்பேரோடு ஆரம்பித்த களஞ்சியம் என்னும் மகளிர் குழு இன்று பல இலட்சம் பேரோடு இயங்கி வருகிறது. நடுவண் அரசின் 'பெண் ஆற்றல் விருது' இவருக்கு வழங்கப்பட்டது. | |
| 26 | (பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக)<br>மாணவர்களாகிய நீங்கள்தான் இத்தேசத்தின் தூண்கள். வருங்காலத்தை ஆட்சி செய்யப் போகின்ற அரசர்கள். ஒரு நாட்டின் எதிர்காலமானது வகுப்பறையில்தான் நிர்ணயிக்கப்படுகிறது. பள்ளிப்பருவத்திலேயே சுதந்திர தின விழா, குடியரசு தின விழா, காந்தி ஜெயந்தி விழா, கொடி நாள் விழா போன்ற விழாக்கள் மூலம் நாம் விடுதலைப் போராட்ட வரலாற்றை அறிந்து கொள்ளலாம்.<br>சுதந்திரம் எனது பிறப்புரிமை அதை அடைந்தே தீருவோம் என்று ஆர்ப்பரித்த உள்ளங்கள் அடக்கப்பட்ட வரலாறு நீண்டு நெடியதாக உள்ளது. விடுதலைப் போராட்டக் காலத்தில் உப்புச் சத்தியாகிரகம், வெள்ளையனே வெளியேறு இயக்கம், ஒத்துழையாமை இயக்கம் போன்ற பல்வேறு போராட்ட நிகழ்வுகளால் நாம் சுதந்திரம் பெற்றோம் என்பதை உணர வேண்டும்.<br>இன்றைய மாணவர்களாகிய நீங்கள் நம் நாட்டின் வளர்ச்சிக்கு தடையாக இருக்கக்கூடிய கையூட்டு, ஊழல் ஆகியவற்றைத் தடுக்க முயற்சிக்க வேண்டும். நன்முறையில் கல்வி கற்று பல்வேறு உயர்பதவிகளை வகிக்க வேண்டும். அப்போதுதான் நாடானது பல்துறையில் முன்னேறும். சாதி, மத, இன வேறுபாடின்றி அனைவரும் இந்தியர் என்ற உணர்வோடு ஒற்றுமையாக நம் நாட்டிற்குப் பாடுபட வேண்டும்.<br>மாணவர்கள் பள்ளிப் பருவத்திலேயே தேசிய மாணவர்ப் படை, பசுமைப் படை, இளஞ்செஞ்சிலுவைச் சங்கம், சாரண சாரணியர் இயக்கம் போன்ற செயல்பாடுகளில் தன்னையும் இணைத்துக்கொண்டு நாட்டின் வளர்ச்சிக்குப் பாடுபட வேண்டும்.<br>என் இந்திய தேசமிது, இரத்தம் சிந்திய தேசமிது, காந்தி மகான் வாழ்ந்த புண்ணிய தேசமிது என்பதை உணர்ந்து இன்றைய மாணவர்களாகிய நீங்கள் வளமான பாரதம் உருவாகப் பாடுபடுங்கள். | 7 |

ஆக்கம்

தமிழ்ச்சிட்டு வலைப்பூ
www.tamizhchittu.blogspot.com


Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593